

கடலூர் மேற்கு மாவட்டம் , அண்ணா கிராம ஒன்றிய கழகம் சார்பில் நாடு போற்றும் நான்காண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம், பாலூர் சன்னியாசி பேட்டையில் நடைபெற்றது. தலைமைச் செயற்குழு உறுப்பினர், ஒன்றிய கழக செயலாளர் வி.கே.வெங்கட்ராமன் தலைமை தாங்கினார். ஜி.க.ஸ்ரீதர், இ. மலையான் வரவேற்புரையாற்றினர். கிளை கழக செயலாளர்கள், முன்னிலை வைத்தனர். தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வி. கணேசன், தலைமை கழக பேச்சாளர் குடியாத்தம் புவியரசி, சிறப்புரையாற்றினர். இக்கூட்டத்தில் பண்ருட்டி நகர மன்ற தலைவர் க.இராஜேந்திரன் ,பொதுக்குழு உறுப்பினர் என். பலராமன், ஒன்றிய செயலாளர் ஆர்.சந்தோஷ் குமார், நகர செயலாளர் ப. மணிவண்ணன், பேரூராட்சி தலைவர் வி.ஜெயமூர்த்தி, அவை தலைவர் பி.எம்.சங்கர், வழக்கறிஞர் இ.மதன குரு ,எஸ்.வி. ராமர், எம் .ஆறுமுகம், உமையாள் ஆறுமுகம், கே.ராமர், ஏ ராஜசேகர், பி.புருஷோத்தமன், என். கோவிந்தராஜ், மற்றும் கிளை கழக நிர்வாகிகள், முன்னோடிகள், கலந்து கொண்டனர். மாணவர் அணி துணை அமைப்பாளர் வாசு. சிவனேசன் நன்றியுரையாற்றினார்.



கடலூர் மாநகர திமுக சார்பில் நாடு போற்றும் நான்காண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் மஞ்சகுப்பம் மணிக்கூண்டு அருகில் நடைபெற்றது. பகுதி செயலாளர் எஸ்.பி.நடராஜன் தலைமை தாங்கினார். மண்டலகுழுதலைவர் த.சங்கீதா வரவேற்புரையாற்றினார். பி.பழனிவேல், பி.சுந்தரமூர்த்தி, அகஸ்டின் பிரபாகரன், எல்சா லட்சுமணன், எம். ராஜேந்திரன், கி.கோ. செல்வமணி, கே.செந்தில்குமார், டி.சிவானந்தம், மஸ்கட் புகழேந்தி, தா .பிரசன்னா, இளங்குமறன். பி பரந்தாமன், ஆர்.வி.மாரியப்பன், எஸ்.சலீம், எம்.ஆர்.இளையராஜா, முன்னிலை வகித்தனர். தலைமை கழக பேச்சாளர்கள் பா. பாஸ்கர், சுவை கே .சுரேஷ் சிறப்புரையாற்றினர். மாநகர கழக செயலாளர் கே.எஸ்.ராஜா, மாநகர மேயர் சுந்தரி ராஜா, மாமன்ற உறுப்பினர் பிரகாஷ், ஹேமலதா சுந்தரமூர்த்தி, கிரேசி, பார்வதி, வழக்கறிஞர்கள் பாபு, கே. எஸ். ஆர். கார்த்திக், மாணவரணி கே.எஸ்.ஆர்.பாலாஜி மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், வட்ட செயலாளர்கள், கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ் ஏற்பாடு! இரா,ஆவுடையப்பன் – மு.அப்துல்வகாப் பங்கேற்பு!

# இராதாபுரம் கிழக்கு ஒன்றியத்தில் மின்னொளி கபாடி போட்டி!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு தொடங்கி வைக்கிறார்! அமைச்சர் கோவி.செழியன் சிறப்புரை!

நெல்லை, மே 15 - முதலமைச்சர் அவர்களின் 72 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு அகில இந்திய அளவிலான மின்னொளி கபாடி போட்டி நெல்லை மாவட்டம் திசையன் விளை அப்புவிளை கோவில் மைதானத்தில் நெல்லை கிழக்கு மாவட்டம் இராதாபுரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர், திட்ட குழு தலைவர் வி.எஸ் ஆர். ஜெகதீஸ் ஏற்பாட்டில் 15.05.2025 முதல் 18.05.2025 வரை நான்கு நாட்கள் (அதாவது வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு ) நடைபெறுகிறது.இன்று 15 ம் தேதி முதல் நாள் ஆண்கள் போட்டியை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு துவக்கி வைக்கிறார்.

மேலும் நடைபெறும் விளையாட்டு போட்டி நிகழ்வில் அமைச்சர்கள் கே.என்.நேரு, அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன், கோவி.செழியன் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ. ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

நெல்லை மாவட்டம் திசையன்விளை அப்புவிளை கோவில் மைதானத்தில் அகில இந்திய அளவிலான மின்னொளி கபாடி போட்டி இன்று 15 ம் தேதி இராதாபுரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ் தலைமையில் சித்திக்,பிரபாகர பாண்டியன்,போர்வெல் கணேசன், பரணி சங்கர், வேலங்குளம் கண்ணன், செல்வகருணாநிதி, சுடலைகண்ணு, முத்துப் பாண்டி என்ற பிரபு. முத்து கிருஷ்ணன்,இசக்கி பாண்டியன், சேதுராமலிங்கம், ராதாகிருஷ்ணன், தமிழ்வாணன், தனலட்சுமி தமிழ்வாணன் ஆகியோர் முன்னிலை நடைபெறுகிறது.

இராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி, களக்காடு கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜன்,நாங்குநேரி கிழக்கு ஒன்றிய செயலாளர் ஆரோக்கிய எட்வின், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு ஆகியோர் வரபேற்புரையாற்றுகின்றனர்.

இன்று இரவு 8 மணிக்கு நடைபெறும் முதல் நாள் ஆண்கள் போட்டியை சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு,பெண்கள் போட்டியை நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் ராபர்ட் புரூஸ் ஆகியோர் துவக்கி வைக்கின்றனர்.

இரண்டாம் நாள் நாளை 16 ஆம் தேதி ஆண்களுக்கான போட்டியை மீனவர் நலன் மற்றும் மீன்வளத்துறை கால்நடை துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன், பெண்களுக்கான போட்டியை நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் ஆகியோர் துவக்கி வைக்கின்றனர்.

நிகழ்வில் மாநில சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு தலைவர் மைதீன்கான், மாவட்ட அவை தலைவர் கிரகாம் பெல்

ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

மூன்றாம் நாள் 17ஆம் தேதி ஆண்களுக்கான போட்டியை உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் துவக்கி வைக்கிறார் பெண்களுக்கான போட்டியை நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் அப்துல்வகாப் எம்.எல்.ஏ. துவக்கி வைக்கிறார்.

நான்காம் நாள் 18 ம் தேதி போட்டியை கழக முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு துவக்கி வைத்து வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசு வழங்கி விழா பேருரையாற்றுகிறார்.

போட்டிகளுக்காண ஏற்பாடுகளை இராதாபுரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ் செய்துள்ளார்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதி செஞ்சி மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் மழவந்தாங்கல்கலைஞர் திடலில் நடைபெற்ற "நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு" சாதனை விளக்கப் பொதுக் கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ சிறப்புரை ஆற்றினார். உடன் தலைமைக் கழக பேச்சாளர் தமிழ் கொண்டான், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ் செல்வன். செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், ஒன்றிய செயலாளர்கள் விஜயராகவன், பச்சையப்பன், மாவட்டப் பிரதிநிதி திருநாவுக்கரசு, துணை செயலாளர் செல்வமணி உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆ.பாலு (எ) திராவிட பாலு
### மே 15 (2013)



இளமைக் காலம் முதற்கொண்டு திராவிட இயக்கத்தில் பற்று கொண்டு திருவள்ளூர் மாவட்டம், கன்னிகைப்பேர் கிளைச் செயலாளராகவும், மாவட்டப் பிரதிநிதியாகவும், இருமுறை எல்லாபுரம் ஒன்றியச் செயலாளராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும், மூன்று முறை கன்னிகைப்பேர் ஊராட்சி மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புற பணியாற்றியவர்.

மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு மூன்றுமாத காலம் சிறைவாசம் அனுபவித்தவர். மேலும் கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

### ஈ,ராஜா எம்.எல்.ஏ. தலைமை!

# சிவகிரி பேரூரில் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. சிறப்புரை!

தென்காசி, மே 15 - தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் சிவகிரி பேரூரில் நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு சாதனை விளக்க பொதுக் கூட்டம் இன்று (15.05.2025 - வியாழக் கிழமை) மாலை 6 மணி அளவில் சிவகிரியில் தலைவர் கலைஞர் திடலில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ தலைமையில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு. ராணி ஸ்ரீகுமார், வாசு தொகுதி பார்வையாளர் தனுஷ் எம் குமார், மாநில மருத்துவரணி துணைச் செயலாளர் செண்பக விநாயகம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தங்கவேலு, சீனிவாசன், பரமகுரு, மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் முத்துச்செல்வி, மாவட்டப் பொருளாளர் சரவணன், மாவட்ட துணை செயலாளர்கள் மனோகரன்,ராஜதுரை, புனிதா ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது. சிவகிரி பேரூர் செயலாளர் சேது சுப்பிரமணியன் வரவேற்புரையாற்றுகிறார். மாவட்ட மருத்துவரணி தலைவர் சுமதி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கு கிறார்.

இந்நிகழ்வில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் பங்கேற்று சிவகிரியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 101 வது பிறந்தநாள் நினைவு கொடி கம்பத்தில் கழக கொடியேற்றுகிறார்.

அதனைத் தொடர்ந்து சிவகிரி வேல்ஸ் கேர் மருத்துவமனையை துவக்கி வைக்கிறார்.அதன் பின்னர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைக்கிறார். பின்னர் சிவகிரியில் நான்காண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டத்தில் சிறப்புரையாற்று கிறார்.

நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணி பொறுப்பாளர்கள், ஒன்றிய, நகரச, பேரூர், செயலாளர்கள்,மாவட்ட அணி தலைவர்கள்,அணி அமைப்பாளர் கள்,வார்டு கழகச் செயலாளர்கள் கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சி நிறைவில் சிவகிரி பேரூராட்சி மன்றத் தலைவர் கோமதி சுந்தர வடிவேலு நன்றியுரையாற்றுகிறார்.

கூட்டத்திற்கான ஏற்பாடுகளை தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க மற்றும் சிவகிரி பேரூர் கழகத்தினர் செய்துள்ளனர்.



வேலூர் மாவட்டத்தில் பாவேந்தர் பாரதிதாசன் பிறந்தநாளை முன்னிட்டு நடைபெற்ற தமிழ் வார விழா போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவ, மாணவிகளுக்கு மநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், 2வது மண்டல குழு தலைவர் வீனஸ் ஆர். நரேந்திரன் மாமன்ற உறுப்பினர் கா.சு.சண்முகம், முதன்மை கல்வி அலுவலர் (பொ) தயாளன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தோற்றம்
06.10.1939

மறைவு
14.05.1985

நாற்பதாம் ஆண்டு நினைவு நாள்



**15.05.2025 (வைகாசி முதல் நாள்)**

எங்கள் குடும்ப விளக்கு

சுயமரியாதைச்சுடர் **பர்வதலெட்சுமி இராசன்**

நீ இன்றி நான் இல்லை
உன்னை நினையாத பொழுதில்லை

# அறந்தாங்கி இராசன்

தி.மு.க. சொத்து பாதுகாப்புக்குழு தலைவர்

**சிவபர்வதம் இல்லம், சுப்பிரமணியபுரம் - 614 805**

மற்றும்

பிள்ளைகள் – பேரப்பிள்ளைகள் – கொள்ளுப்பேரப்பிள்ளைகள்